# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,993 — 1933 ம் ௵ ஆடி ௴ 21 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கத் திருஸ்தல யாத்திரைச் சட்டம்.**

முன்னேஸ்வரக் கோவில் திருவிழா சம்பந்தமாக உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

உத்தம தேசாதிபதியவர்களால் "திருஸ்தல யாத்திரைச் சட்டம்" எனப் பெயர் பூண்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,
டீ. பீ. ஜயதிலக்க,
கௌரவ உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள்.

உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ௵ ஆடி ௴ 18 ந் உ.

மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு" என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள்ளடங்கிய விசாலத்தைக் கருதும்.

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினுல் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ளவேறு இடங்களில் ஒருவரும் மலசலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்துவைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப்பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (*a*) வாடிக்குரிய இடப்பரப்பில் ஆடுமாடு வைத்திருக்கப்படாது. உதவி அரசாட்சி ஏசன்றரால் ஆடுமாடு கட்டுகிறதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது ஒரு மாட்டுக்காலையாகப் புறம்பாக நியமிக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒழிய வாடிக்குரிய இடப்பரப்புக்குச் சமீபமாக ஆடுமாடு வைத்திருக்கப்படாது.

(*b*) ஆடுமாடுகளைத் தன்பொறுப்பில் வைத்திருப்பவன் வாடிக்குச்சேர்ந்த இடப்பரப்பில் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடுமாடுகள் நிற்கும் இடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான விழாமலும் தூசிபடியாமலும் இருக்கும்படி (*a*) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும். அல்லது (*b*) கண்ணுடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (*c*) வைத்திய உத்தியோகஸ்தரால் வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப் பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும் தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தலயாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தைவிட்டுப்போகும்படி செய்தும் அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (*a*) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்துவியாதியுள்ள ஒவ்வொருவரும் அல்லது (*b*) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச்சங்கதியை டாக்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தையல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாகவைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தையல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசண்டரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பான்போறனை சோடாமோள் அல்லது

காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாடது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றையதெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெருமல், ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங்களில் ஆடு மாடு அடிப்போர் அவ்விடத்தை துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடைவர்களா யிருத்தல் வேண்டும்.

## இடாப்பு.

முன்னேஸ்வரக்கோயில் திருவிழா வாடி எல்லை.

வடக்கு:—பாலைக்குளம், கொஹொம்பகஸ்பிற்றிய; முத்தறந்தளுவ; முன்னேஸ்வரம் குளம்.

தெற்கு:—முன்னேஸ்வரம் வயல்; நல்லநாயகன் குளம்.

கிழக்கு:—முன்னேஸ்வரம் குளம்: சிலாபத்திலிருந்து குருனைகலுக்குப் போகும் பெருவழி; நல்லநாயகன் குளம்.

மேற்கு:—முன்னேஸ்வரம வயல்; சிலாபத்திலிருந்து குருனைகலுக்குப் போகும் பெருவழி, பாலைக்குளம்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாணந்துறைக்கும் களுத்துறை தெற்கு புகையிரத ஸ்தானங்களுக்கும் இடையே கரையோரச் செல்லும் றெயில் ரோட்டை இரு பிரிவாக்கும்பொருட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 19,607. குறிச்சி—பின்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 4 | கறன்டககவத்தை வரி இல. 2 | 6 வயதான 1 தென்னமரமும், 20 வயதான 3 தென்னமரங்களும் உள்ள தென்னந்தோட்டம் | முடிக்கும், ஜி. டேவிட் டி. சில்வாவுக்கும் | 0 | 0 | 2 |
| 11 | மூதில்லுககவத்தை வரி இல. 34 | 40 வயதான 32 தென்னமரமும், 15 வயதான 14 தென்னமுரமும், 5 வயதான 3 தென்னமரமுள்ள தென்னந்தோட்டம் | ஷை .. | 0 | 1 | 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஸ்ரீ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 18 ந் தேதியிலன்று பிற்பகல் 3 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டு தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1933 ம் ஸ்ரீ (ஜூலை) ஆடிமீ 15 ந் உ.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவஸ்கம என்னுங் கிராமத்தில் இரும்பு வேலை நடப்பிக்கும் பாடசாலை ஒன்று ஸ்தாபித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல A 71. குறிச்சி—நாவங்கம.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முத்தறலன்ற .. | தோட்டம் .. | நாறன்வித்த கெதறமொகான்றிறம .. | 0 | 0 | 22·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஸ்ரீ ஆவணி மாசம் 15 ந் தேதியிலன்று 10 மணிக்கு நுவரெலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1933 ம் ஸ்ரீ ஆடிமீ 17 ந் உ.

டபிள்யு. ஜே. எல். ஗ிறேஜேர்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அங்குன்மடுவத்தில் பாடசாலை ஒன்று கட்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 283. குறிச்சி—அங்குல்மடுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 6M | உஸ்ருப்ப .. | 1 பாடசாலை கட்டிடம் உள்ள தோட்டம், 5 தென்னமரங்கள் 30 வயது, 4 தென்னமரங்கள் 10–30 வயது, குரக்கனும் மரக்கறியும் | அங்குல்மடுவத்த ஏ. கேபிறியல் சில்வா, பீ. பீ. அல்விஸ்காமி, பீ. பீ. டினேறிஸ்காமி, பீ. பீ. அபேகாமி, பீ. பீ. மந்திஸ்காமி, கட்டிடம் உரித்தாளிகளால் கட்டப்பட்டது | 0 | 2 | 20 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 9 | உஸ்ருப்ப | .. மரங்கள், 11 வாழைப்பற்றையும், 30 வயதுள்ள தென்னைமரமுள்ள தோட்டம் | அங்குல்மடுவெ ஏ. கேபிறியல் சில்வா, பீ. பீ. அல்விஸ்காமி, பீ. பீ. திறேறுநிஸ்காமி, பீ. பீ. அபேகாமி, பீ. பீ. அந்திநிஸ்காமி | 0 2 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஸ்ரீ ஆவணி மாசம் 18 ந் தேதியிலன்று 8.30 மணிக்கு அங்குல்மடுவ பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

1933 ம் ஸ்ரீ ஜூன்மீ 2 ம் திகதி, நிம்பர் 7,984 ம் "கசெற்றில்" பிரசித்தப்படுத்திய அறிவித்தல் இதனால் அவலப்படுத்தப்பட்டது.

ஹம்பந்தோட்டைக் கச்சேரி,
1933 ம் ஸ்ரீ ஜூலைமீ 17 ந் திகதி.

எப். லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வவுனியா புகைரதவீதி தண்ணீர் பைப்லையினுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 234. குறிச்சி—வவுனியா சுகாதாரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | குருமன்காடு (வீட்டுவரி இல. 622 | நெல்வயல் .. | (1) வவுனியா, இப்போ ஒப்பால்கலதோட்டம், கம்மடுவா, ஏ. கனகரத்தினம் பெண் செல்லம்மா, (2) வவுனியா வயித்திலிங்கம் கந்தையா மகன் நவம் | 0 0 1·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஸ்ரீ ஆவணி மாசம் 31 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு வவுனியா கோட்டுவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மூல்லைத்தீவு கச்சேரி,
1933 ம் ஸ்ரீ ஆடிமீ 15 ந உ.

ஜீ. டி சொயிசா,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓர் கிணறு கட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 43. குறிச்சி—நிந்தனி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நிந்தனித்தோட்டம் அசெஸ்மென்ட் நி. 19a | வெண்காணி .. | நிந்தனியில் இருக்கும் எஸ்தோ எஞ்சவினு .. | 0 0 2·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஸ்ரீ ஆவணிமீ 26 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1933 ம் ஸ்ரீ ஆடிமீ 15 ந உ.

ஜே. லேட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
இலக்கம் 529 (புத்தளம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அல்லது அப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஸ்ரீ (ஜூலை) ஆடிமீ 21 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்கின் மிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1)ம் பிரிவின்படி அக்காணி முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1933 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 13 ந் தேதி, புத்தளம் கச்சேரியிற் கையொப்பமிடப்பட்டது.

எட்மன் றொட்றீகோ,
உதவி அரசாட்சி ஏஜன்ற்,
புத்தளம்—சிலாபம் டிஸ்திறிக்கள்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் புத்தளம் உதவி அரசாட்சி ஏஜண்டவர்களிடமும் அவைகளின் படங்கள் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ் வக் காணிகளுக்குள்ள உரித்தாமென அறிந்துகொள்க.

அட்டவணை.

குறித்த காணிகளின் விபரம்.

I.—பிரதமபடம் இல. 7,052.

வடமேல் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக், கற்பிட்டி டிவிசன், இல்லையடி என்னும் கிராமத்திலிருக்கும் நாவலடித்தோட்டமென்று பொதுவாக அறியப்படுவதும் அப்பெயரினல் கூப்பிடப்படுவதுமான ஒரு காணி (சிறு கடல் ஓரமாய்க் குறிக்கப்பட்டிருக்கும் ஒரு பகுதி). 1 ஏக்கர், 1 றூட், 21 பேட்சஸ் விசாலங்கொண்டதும், 7,052 ம் இலக்கப் படத்தில் 4 ம் துண்டாய்க் காட்டப்பட்டதும், பின்வரும் எல்லைகளையுடையதும்: வடக்கும், கிழக்கும்-ஆணவாசல் கம்பனியாரால் உரித்தாடப்படும் நாவலடித் தோட்டம் (T. P. 424,352); தெற்கு-கரத்தைப்பாதை; மேற்கு-ஆணவாசல் தோடுவா.

II.—பிரதமபட இல. 7,052.

வடமேல் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக், கற்பிட்டி டிவிசன், இல்லையடி யென்னுங் கிராமத்திலிருக்கும் கணக்கன கன்ளித்தோட்டம் யென்று பொதுவாக அறியப்படுவதும் அப்பெயரினல் கூப்பிடப்படுவதுமான ஒரு காணி 5 ஏக்கர், 3 றூட், 11 பேர்ட்சஸ் விசாலங்கொண்டதும் 7,052 இலக்கப் படத்தில் 7 ம் துண்டாய்க் காட்டப்பட்டதும், பின்வரும் எல்லைகளையுடையதும். வடக்கு-ஆணவாசல் தென்னந்தோட்டக் கொம்பனி அவர்களுக்குச் சொந்தமான ஓர் ஓடையும் அவர்களால் உரித்தாடப்படும் கணக்கன்கன்ளித் தோட்டம் (T. P, 424,352); கிழக்கு-தோட்டக் கரத்தைப் பாதையும் சி. பி. சுல்த்தான் மரைக்கார்யரா லுரித்தாடப்படும் இரல்ஓடைத் தோட்டம்; தெற்கு-மிஸ்ரர் ஒ. பி. மவுண்ட் அவரால் உரித்தாடப்படும் கொண்டக்காரன்தீவுத் தோட்டம் (T. P. 85,074, 85,073); கிழக்கு-முடிக்குரிய தரவைக்காணி.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நிம்பர் 530 (புத்தளம்).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அல்லது எப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ௵ (ஜுலை) ஆடிமீ 21 ௳ தேதியிலிருந்து மூன்றுமாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணிகளை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1933 ம் ௵ (ஜுன்) ஆனிமீ 13 ௳ தேதி, புத்தளம் கச்சேரியிற் கையொப்பமிடப்பட்டது.

எட்மன் ரூட்றிக்கோ,
உதவி அரசாட்சி ஏஜன்ற்,
புத்தளம்,—சிலாபம் டிஸ்திறிக்கள்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் படங்கள் அளவைக் கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ் வக்காணிகளுக்குள்ள உரித்தாமென அறிந்துகொள்க.

அட்டவணை.

வடமேல் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக், கற்பிட்டி டிவிசன், கற்பிட்டி தோட்டக்காட்டில், ஆணவாசல் என்று அழைக்கப்படும் கிராமத்திலிருக்கும் பின்வரும் காணித் துண்டுகள்.

I.—பிரதமபடம் இல. 7,053.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | ஆணவாசல்தோட்டம் .. | .. 12 3 25 |

எல்லைகளாவன: வடக்கிலும், கிழக்கிலும்-சிறு கடல்; தெற்கில்-புல்தரவை என்று அழைக்கப்படும் முடிக்குரிய காணி; மேற்கு-முடிக்குரியதென்றும் மிஸ்டர் ஒ. பி. மவுண்ட் தனக்குடையதென்றும் வாதாடப்படும் ஆணவாசல்தோட்டம் (பி. ப. 7,053, 5 ம் துண்டு), ஆணவாசல் தென்னந்தோட்டக் கம்பெனியாரால் உரித்தாடப்படும் ஆணவாசல் தோட்டம் (T P. 424,316), முடிக்குரிய ஆணவாசல் தோட்டம் (P. P. 7,053, 4A துண்டு), மற்ற T. P. 184,846 ல் உள்ள காணிகள்.

II.—பிரதமபடம் 7,053

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 3 | ஆணவாசல் தோட்டம் | .. 8 3 39 |
| 3A | ஷை .. | .. 5 1 28 |
| | | 14 1 27 |

எல்லைகளாவன: வடக்கு-T. P. 184,843 க்கு உடைய காணி, ஆணவாசல் தென்னந்தோட்டக் கம்பெனியாருக்குடைய ஆணவாசல் தோட்டம் (T. P. 424,306) இன்னும் T. P. 184,846 க்கு உடைய காணி; கிழக்கு-T. P. 184,846 ம் ஆணவாசல் தென்னந்தோட்டக் கம்பனியாருக்குடைய ஆணவாசல் தோட்டம்(T. P. 424,316); தெற்கு-ஆணவாசல் தென்னந்தோட்டக் கம்பனியாருக்குடைய ஆனவாசல் தோட்டம் (T. P. 424,316); மேற்கு-மீராமதார் நாச்சியாரும் மற்றவர்களும் உரித்துண்டென்று சொல்லப்படும் தென்னந்தோட்டம், தோட்டக் கரத்தைப்பாதை, உப்புத் தரவை என்று அழைக்கப்படும் முடிக்குரியதென்றும், பிதங்கலி ஒடையும் T. P. 184,844 ல் உள்ள காணியும்.

III.—பிரதமபடம் 7,053.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5 | ஆணவாசல்தோட்டம் .. | .. 7 3 35 |
| 5A | ஷை .. | .. 3 2 2 |
| | | 11 1 37 |

எல்லைகளாவன: வடக்கு-ஆணவாசல் தென்னந்தோட்டக் கம்பனியாருக்குடைய ஆனவாசல் தோட்டம் (T. P. 424,316); கிழக்கு-முடிக்குரியதென்றும் மிஸ்டர் ஒ. பி. மவுண்ட் தனக்குடையதென்றும் வாதாடப்படும் ஆனவாசல் தோட்டம் (P. P. 7,053), 2 ம் துண்டு); தெற்கு-முடிக்குரியதென்று சொல்லப்படும் புல் தரவையும் தோட்டக் கரத்தைப்பாதையும்; மேற்கு-ஆண்வாசல் தென்னந்தோட்டக் கம்பனியாருக்குடைய ஆணவாசல் தோட்டம் (T. P. 424,307), மீரா மதார் நாச்சியாரும் மற்றவர்களும் உரித்துண்டென்று சொல்லப்படும் தென்னந்தோட்டம்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.